වාර්ෂික වාර්තාව සහ ගිණුම් ප්‍රකාශය
வருடாந்த அறிக்கையும் நிதிக்கூற்றும்
ANNUAL REPORT & STATEMENT OF ACCOUNTS

2021

හානිපූරණය සඳහා වන කාර්යාලය - ශ්‍රී ලංකාව
இழப்பீடுகளுக்கான அலுவலகம் - இலங்கை
OFFICE FOR REPARATIONS - SRI LANKA

අංක. 408, ගාලු පාර, කොළඹ - 03.
இல. 408, காலி வீதி, கொழும்பு- 03.
No. 408, Galle Road,Colombo – 03.

இழப்பீடுகளுக்கான அலுவலகம் - இலங்கை

ஆண்டறிக்கை 2021

(நிதி அறிக்கையின் பொருட்டு வடிவமைக்கப்பட்டது)

இழப்பீடுகளுக்கான அலுவலகம் - இலங்கை
408, காலி வீதி
கொழும்பு 03.

இழப்பீடுகளுக்கான அலுவலகம்
ஆண்டறிக்கை – 2021

1. அறிமுகம்

இழப்பீடுகளுக்கான அலுவலகம் மீளாய்வாண்டின் போது அதன் சட்டப்பூர்வ ஆணையை அமுல்ப்படுத்துவதில் கவனம் செலுத்தி அதன் செயற்பாடுகளைத் தொடர்ந்தது. அலுவலகம் அதனது இரண்டாவது ஆண்டை மார்ச்சில் நிறைவு செய்து மூன்றாவது ஆண்டைத் தொடங்கியுள்ளதால் அலுவலகம் சேவை செய்ய உறுதிபூண்டுள்ள இன்னலுக்குள்ளான சமூகத்தின் தேவைகளைப் பற்றிய சிறந்த புரிந்துகொள்ளலுடன் அலுவலகத்தால் அதன் பல செயற்பாடுகளை வடிவமைக்க இயலுமாக அமைந்திருந்தது.

2018 இன் 34 ஆம் இலக்க இழப்பீடுகளுக்கான அலுவலக சட்டத்தின் 2 ஆம் பிரிவு, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பின்வரும் நோக்கங்களை குறிப்பிடுகின்றது –

(1) இன்னலுக்குள்ளான ஆட்களுக்கு தனியான மற்றும் கூட்டான இழப்பீடுகளை வழங்கும் பொருட்டு இழப்பீடுகளுக்கான கொள்கைகளை வகுத்தமைத்தலும் அவற்றை அமைச்சரவைக்கு விதந்துரைத்தலும்.

(2) பொதுக்கல்வி, நினைவேந்துகின்றமை பற்றியதும் மற்றும் சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டோர் அத்துடன் அங்கவீனமுற்ற ஆட்கள் பற்றியதுமான விசேடித்த கொள்கைகள் உட்பட, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறாக, இழப்பீடுகள் பற்றிய அத்தகைய கொள்கைகளை இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் வசதிப்படுத்தலும் நடைமுறைப்படுத்தலும்.

(3) நல்லிணக்கத்தை இலக்காகக் கொண்ட வேறு பொறிமுறைகளுடன், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஒத்தியல்பை உறுதிப்படுத்துவதற்கான இணைப்புக்களை தாபித்தல். மற்றும்

(4) தகவுடைய இன்னலுற்ற ஆட்களுக்கு இழப்பீடுகளை வழங்குதல் தொடர்பான முன்னேற்றத்தை கண்காணித்தலும் மதிப்பீடு செய்தலும்.

2. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள்

மீளாய்வாண்டின் போது செயற்பட்ட இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள் பின்வருமாறு உள்ளனர்:

1. திருமதி தாரா விஜயதிலக - தலைவி
2. டாக்டர் ஜே.எம். சுவாமிநாதன் - உறுப்பினர்
3. திரு ஏ. ஏ. எம். பாத்திஹு - உறுப்பினர்
4. செல்வி செல்லத்தம்பி சுமித்ரா - உறுப்பினர்
5. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) பாலித பெர்னாண்டோ - உறுப்பினர் (2021 மே 24 இல் நியமிக்கப்பட்டுள்ளார்)

இழப்பீடுகளுக்கான அலுவலகம் செயலகம் பணிப்பாளர் நாயகம் தலைமையிலான துணை உத்தியோகத்தர்களை உள்ளடக்குகின்றது, செயலகம் 2019 ஏப்ரலில் தொடங்கப்பட்டதில் இருந்து பகுதி நேர பதில் பணிப்பாளர் நாயகம் ஒருவரை மாத்திரமே கொண்டிருந்ததுடன் இதன் விளைவாக அதன் பணி வெளியீட்டில் கடுமையான இடையூறு ஏற்பட்டது, ஆனால் 2021 ஆகஸ்ட் 2 முதல் அமுலுக்கு வரும் வகையில் பொதுச் சேவையில் இருந்து இரண்டாம் நிலை முழுநேர பணிப்பாளர் நாயகம் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்ய முடிந்தது.

3. மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தினால் உருவாக்கப்பட்ட இழப்பீடுகளை வழங்குவதற்கான இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் 2021 ஆகஸ்ட் 17 இல் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டது. இது கொள்கை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான நியதிச்சட்ட செயன்முறையை பூர்த்தி செய்து, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வேலைத் திட்டத்திற்கான

அடிப்படையை வழங்குகின்றது. சட்டத்தில் கோரப்பட்டுள்ள இழப்பீட்டுக் கொள்கை மற்றும் வழிகாட்டல்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நீதி அமைச்சு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட கொள்கைகள், இன்னலுற்ற நபர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதில், தலையீட்டின் 8 முக்கிய கருப்பொருள் பகுதிகள் மற்றும் கடைபிடிக்க வேண்டிய 10 வழிகாட்டல் கோட்பாடுகளை அடையாளம் காட்டுகின்றது.

தலையீடுகளுக்கான முக்கிய கொள்கை கருப்பொருள் பகுதிகள்

i. வாழ்வாதார உதவி
ii. இழப்பீடு மற்றும் நிதி உதவி
iii. காணி உரிமைகளை மீட்டெடுத்தல்
iv. வீடமைப்பு வசதி வழங்குதல்
v. சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி
vi. நிர்வாக ரீதியான நிவாரணம்
vii. உளவியல் சமூக ஆதரவு
viii. ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் வன்முறை மீண்டும் நிகழாமல் இருத்தல் என்பவற்றிற்கான நடவடிக்கைகள்

இழப்பீடுகளைத் தீர்மானிப்பதில் கருத்தில் எடுத்துக்கொள்ளப்படும் 10 வழிகாட்டல்கள்

1. பாதிக்கப்பட்டவர்களை மையாகக்கொள்ளல் - அனைத்து தீர்மானங்களும் இன்னலுற்ற நபர்களுக்கு எது சிறந்தது என்பதை அடிப்படையாகக் கொண்டது.
2. இன்னலுற்ற நபர்கள் இழப்பீடுகளை பெற்றுக்கொள்வதற்கான தகுதிக்கான அளவுகோல்கள்,
3. தகுதியுள்ள இன்னலுற்ற நபர்களுக்கு வழங்கப்படும் படிவம் மற்றும் பொருத்தமான இடங்களில் இழப்பீடுகளின் அளவு
4. நிதி இழப்பீட்டிற்காக இன்னலுற்ற நபர்களின் தகுதிக்கான அளவுகோல்கள்
5. இன்னலுற்ற நபர்களின் அவசர இழப்பீடுகளுக்கான தகுதிக்கான அளவுகோல்கள்
6. இன்னலுற்ற நபர்களுக்கு பல்வேறு வகையான இழப்பீடுகளை ஏற்பாடு செய்தல் அல்லது வழங்குவதில் உதவக்கூடிய நிறுவனங்கள்.
7. இழப்பீடுகளுக்காக சரிபார்க்கப்பட்ட விண்ணப்பங்கள் எந்த அளவுகோலின் அடிப்படையில் முன்னுரிமை அளிக்கப்படும்
8. நம்பகத்தன்மையை சரிபார்ப்பதற்கான அளவுகோல்கள்
9. இறந்தவர்களை நினைவுகூருவதற்கான அளவுகோல்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள்
10. இன்னலுற்ற நபர்களின் குறிப்பிட்ட குழுக்களின் விசேட தேவைகளை நிவர்த்தி செய்தல்

இழப்பிடுகளுக்கான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் செயன்முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

3.1 வாழ்வாதார உதவி

பாதிக்கப்பட்ட சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, OR புதிய ஆரம்பிப்புக்கள் மற்றும் தொழில்முனைவோரை செயற்படுத்தும் அறிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்கியுள்ளது. உள்நாட்டில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி புதிய வணிகங்களை தொடங்குவதற்கான அறிவை இன்னலுற்ற நபர்களுக்கு வழங்குவதற்காக இந் நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பாதிக்கப்பட்ட சமூகம் பாரம்பரிய தொழில்களை விட சந்தையில் அதிக போட்டித்தன்மை கொண்ட புதிய ஆரம்பிப்பு வாய்ப்புகளை ஆராய்வதற்கு உதவும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தெல்லிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் பெண் குடும்பத் தலைவர்களுக்கான முதலாவது அறிவு மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் திசெம்பர் மாதம் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் நூற்றியிரண்டு (102) பெண்கள்

பங்குபற்றியிருந்தனர், இதில் கன்னி தேங்காய் எண்ணெய் பிரித்தெடுத்தல், திரவ சோப்பு தயாரித்தல் போன்ற புதிய ஆரம்பிப்புக்கள் பற்றிய விரிவுரைகள் மற்றும் செயன்முறை விளக்கங்கள் ஆகிய இரண்டும் வழங்கப்பட்டிருந்தது. புதிய முயற்சிகளை ஆதரிக்க ஆர்வமுள்ள பயனாளிகளுடன் பின்தொடர் நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

3.2 நட்டஈடு மற்றும் நிதி ஆதரவு:

மீளாய்வு காலப்பகுதியின் போது இழப்பீடுகளுக்கான அலுவலகம் 5,964 உரிமைகோரிக்கைகளை செயற்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மோதல்கள் மற்றும் 2006 மற்றும் 2019 இற்கு இடையில் ஏற்பட்ட ஏனைய ஏழு சிவில் கலவரங்கள் என்பவற்றின் விளைவாக ஏற்பட்ட இறப்பு, காயம் மற்றும் நட்டம் அல்லது சொத்து சேதம் என்பவற்றிற்கான நட்டஈடாக ரூபா 399.8 மில்லியன் தொகையை செலுத்தியிருந்தது.

2021 இல் நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் - முக்கிய அம்சங்கள்

	விடயம்	அளவு
1	”மீண்டெழும் செலவினங்களுக்கான” மொத்த பாதீட்டு ஒதுக்கீடு	ரூபா 900 மில்லியன்
2	இழப்பீட்டு கொடுப்பனவுக்காக ”மீண்டெழும் செலவின” பாதீட்டில் இருந்து உள்ளக ரீதியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தத் தொகை	ரூபா 800 மில்லியன்
3	மொத்த மீண்டெழும் பாதீட்டின் சதவீதமாக உள்ளக ஒதுக்கீடு (அதாவது 800 மில்லியன்)	88.9%
4	2021 ஜனவரி 1 இல் உள்ளவாறு இழப்பீடுகளுக்கான அலுவலகத்தில் செயன்முறைப்படுத்தப்பட வேண்டிய நிலுவையாக உள்ள உரிமைக்கோரல் விண்ணப்பங்கள்	12,262
5	ஆண்டின் போது பெறப்பட்ட புதிய விண்ணப்பங்கள்	5,827
6	2021 சனவரி 1 இல் உள்ளவாறு கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்காக காத்திருக்கிற உரிமைகோரல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை	2,950
7	ஆண்டின் போது கொடுப்பனவிற்காக செயன்முறைப்படுத்தப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட உரிமைகோரல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை	3,208
8	தீர்ப்பனவு செய்யப்பட்ட உரிமைகோரல்களின் மொத்த எண்ணிக்கை	5,964
9	5964 உரிமைக்கோரல் விண்ணப்பதாரர்களுக்கு செலுத்தப்பட்ட மொத்தத் தொகை	ரூபா 399.8 மில்லியன்
10	ஆண்டிறுதியில் கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்டு தீர்ப்பனவு செய்வதற்காக காத்திருக்கிற உரிமைகோரல்களின் எண்ணிக்கை	194
11	கொடுப்பனவிற்காக அங்கீகரிக்கப்பட்ட உரிமைகோரல்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு ஆண்டிறுதியில் உள்ளவாறு தேவைப்பட்ட தொகை	ரூபா 7.9 மில்லியன்

2021 ஆம் ஆண்டில் இழப்பீட்டு கொடுப்பனவிற்காக ரூபா 800 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் கொவிட்19 தொற்றுநோயின் விளைவாக அடிக்கடி பூட்டுதல்கள் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் தேவைப்பட்டன. இதன் விளைவாக உரிமைகோரல்களை செயன்முறைப்படுத்துதல் கடுமையாக தடைபட்டது.

இழப்பீட்டு கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, ஆட்கள் ஆதனங்கள் மற்றும் கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யும் அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்ட கடன் திட்டத்தையும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் தொடர்ந்து செயற்படுத்தியது. பொது திறைசேரியால் வங்கிக்கு விடுவிக்கப்படும் பணத்திலிருந்து இலங்கை வங்கியின் ஊடாக கடன்கள் வழங்கப்படுகின்றன. இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள், பயனாளிகளைத் தெரிவுசெய்வதற்கு விண்ணப்பதாரர்களை மதிப்பீடு செய்து பரிந்துரைப்பதற்கு வங்கி அதிகாரிகளுடன் பணியில் ஈடுபட்டுள்ளனர். இத் திட்டத்தின் கீழ், இன்னலுக்குள்ளான நபர்களுக்கு சுயதொழில் மற்றும் வீடமைப்பிற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும், சமூகரீதியில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளிற்கும் சுயதொழிலுக்கு ஆதரவு வழங்கப்படுகின்றது. வருடாந்தம் 2% வட்டி விகிதத்தில்

அதிகபட்சமாக ரூபா 250,000 தொகை கடன்களாக வழங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழான முன்னேற்றத்தின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

திட்டம்	2021 ஆம் ஆண்டின் போது கடன்களை பெற்றுக்கொள்வதற்கு OR ஆல் பரிந்துரைக்கப்பட்ட எண்ணிக்கை	2021 ஆம் ஆண்டின் போது BoC இடமிருந்து கடன்களை பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை	கடன்களாக வழங்கப்பட்ட தொகைகள் (ரூபா)
இன்னலுக்குள்ளான நபர்களுக்கான சுயதொழில் உதவி	49	206*	42,350,000
இன்னலுற்ற நபர்களுக்கான வீடமைப்பு வசதி	77	65	16,200,000
சமூக ரீதியாக ஒருங்கிணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான சுயதொழில் ஆதரவு	33	18	7,550,000
மொத்தம்	**159**	**289**	**6,610,000**

* இது 2020 ஆம் ஆண்டின் போது பரிந்துரைக்கப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கையை உள்ளடக்குகின்றது.

விண்ணப்பதாரிகள் பிணையை வழங்க முடியாத காரணத்தால், OR ஆல் பரிந்துரைக்கப்பட்ட கடன்கள் அவ் அனைவரிற்கும் வங்கியால் வழங்கப்பட முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. சுயதொழில் செயற்திட்டங்களைத் தொடங்குவதற்கு அல்லது தொடர்வதற்கு நிதி உதவி தேவைப்படுபவர்களுக்கு சிறந்த பலன்களை அடைந்துகொள்வதற்காக திட்டத்தை மீள்வடிவமைத்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

3.3 காணி உரிமைகளை மீட்டெடுத்தல்; வீடமைப்பு வசதியை வழங்குதல்; சமூக உட்கட்டமைப்பு அபிவிருத்தி; நிர்வாக ரீதியான நிவாரணம்

ஏற்கனவே மாவட்ட மட்டத்தில் பல நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளதால், இடைவெளிகளைக் இனங்காண்பதற்கு மாவட்ட நிர்வாகத்துடன் இணைந்து செயற்படுவது அவசியம் என இழப்பீடுகளுக்கான அலுவலகம் கருதுகிறது. இந் நோக்கத்திற்காக, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் வகிபங்கு மற்றும் ஆணை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஆதரவைப் பற்றி கலந்துரையாடுவதற்கும் 2021 நவம்பரில் 25 மாவட்டங்கள் அனைத்திலும் உள்ள மாவட்டச் செயலாளர்களை இழப்பீடுகளுக்கான அலுவலகம் சந்தித்தது. பாதிக்கப்பட்ட சமூகத்தின் தேவைகளை இனங்காண்பதற்கு மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் இருந்து தொடர்புடைய தகவல்களை சேகரிப்பதற்கு இழப்பீடுகளுக்கான அலுவலகமானது வினாக் கொத்தொன்றினை விநியோகித்தது. இந்தத் தேவைகளை அந்தந்த நிகழ்ச்சித்திட்டங்களில் இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை கண்டறியும் பொருட்டு அதற்குப் பின்னர் சம்பந்தப்பட்ட அரசாங்க நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடாத்தப்படும்.

3.4 உள சமூக ஆதரவு

பாதிக்கப்பட்டவர்கள் மீதான மோதலின் தாக்கமானது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு தீவிர குறையாக இனங்காணப்பட்டது. ஆரம்ப உள சமூக ஆதரவு நிகழ்ச்சித்திட்டமொன்று வடிவமைக்கப்பட்டதுடன் 26 சம்பவ முகாமையாளர்களுக்கான பயிற்சியானது மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டது. பயிற்சியானது சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தத்துவங்கள் மற்றும் நியமங்களை அடிப்படையாகக் கொண்டிருந்தது. கொவிட்19 கட்டுப்பாடுகள் காரணமாக பெரும்பாலான பயிற்சிகள் மெய்நிகர் முறையில் நடாத்தப்பட வேண்டியிருந்தன. இவ் ஆண்டில் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பிரதேச செயலகப் பகுதிகளில் அதாவது. கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை, குருநாகல் மற்றும் மாத்தறை மாவட்டங்களுக்குள் இன்னலுக்குள்ளான 136 நபர்களுடன் கள மட்ட சந்திப்புக்களை மேற்கொள்ளப்பட்டு இம் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன், களப் பணியானது 2022 மார்ச் அளவில் பூர்த்தி செய்யப்படும் விதத்தில் பட்டியலிடப்பட்டிருந்ததுடன் சம்பவ

முகாமையாளர்கள் 2022 யூன் வரையான சுமார் ஆறு மாதங்களுக்கு இச் செயன்முறையில் ஈடுபடுவார்கள்.

3.5 ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் வன்முறைகள் மீண்டும் நிகழாமல் இருத்தல் என்பவற்றிற்கான நடவடிக்கைகள்

பல முன்முயற்சிகள் இனங்காணப்பட்டு கலந்துரையாடப்பட்டு வருகின்றதுடன் அரசாங்கம் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் உட்பட தொடர்புடைய பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படும். ஆரம்ப தர மாணவர்களிடையே அமைதி மற்றும் ஒற்றுமையை மேம்படுத்தும் வகையில் சித்திரப் புத்தகம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஆரம்ப கலந்துரையாடல் கல்வி அமைச்சுடன் நடைபெற்றது.

காணாமல் ஆக்கப்பட்டோரிற்கான அலுவலகம் (OMP), தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் (ONUR) மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகம் ஆகியவற்றின் நோக்கங்களின் பொதுவான தன்மையைக் கருத்தில் கொண்டு, ஆதரவுக்கான பொதுவான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பகுதிகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கும், அதன் மூலம் நகலாக்கம் செய்யப்படுவதை தவிர்ப்பதற்கும் மற்றும் வளங்களின் அர்த்தமுள்ள பயன்பாட்டை ஊக்குவிப்பதற்கும் ஒழுங்காக கூட்டங்களை நடாத்துகின்ற ”Unity Cluster” என்ற கூட்டு ஆலோசனை குழுவை இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உறுப்பினர்கள் ஆரம்பித்துள்ளனர்.

3.6 ஏனைய முக்கிய முன்முயற்சிகள்

- **பங்குதாரர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்**

அமைச்சரவை அங்கீகரித்த கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் மற்றும் இழப்பீடுகளை வழங்குதல் தொடர்பாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின வகிபங்கு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இழப்பீடுகளுக்கான அலுவலகம் வெவ்வேறு பங்குதாரர் குழுக்களுக்கு விளக்கங்களை அளித்தது. வழங்கப்பட்ட விளக்கங்களின் சுருக்கம் பின்வருமாறு-

  - அபிவிருத்திக்கான பங்காளர்கள் - 2021 ஒக்தோபர் 8
  - வண்ணாத்துப்பூச்சி அமைதி பூங்கா - ஒக்தோபர் 27
  - வட மாகாண கௌரவ ஆளுநர் மற்றும் மாவட்டச் செயலாளர்களுடனான சந்திப்பு - 2021 ஒக்தோபர் 29
  - சிவில் சமூகங்களின் கூட்டமைப்பு- 2021 நவம்பர் 9
  - முஸ்லீம் பெண்கள் அபிவிருத்திக்கான அறக்கட்டளை (புத்தளம் மாவட்டத்தின் இடம்பெயர்ந்த சமூகம்) - நவம்பர் 25
  - மட்டக்களப்பு மாவட்ட அங்கவீனமுற்றோருக்கான செயற்பாட்டுக் குழு - 2021 திசெம்பர் 21

- **சிவில் சமூக அமைப்புகளுடனான ஈடுபாடு:**

கொள்கை மற்றும் வழிகாட்டல்களை வரைவதற்கு முன்னர், கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக இழப்பீடுகளுக்கான அலுவலகமானது சிவில் சமூக அமைப்க்களுடனான கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தது. கள மட்டத்தில் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதில் இவ் அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதும அவற்றின் ஆதரவினைப் பாதுகாத்துக்கொள்வதும் முக்கியமானவை என இழப்பீடுகளுக்கான அலுவலகமானது கருதுவதுடன் குறிப்பாக இவற்றின் ஒத்துழைப்பின் மூலம் வளப் பயன்பாட்டையும் அதிகப்பதனையும் கவனத்திற் கொள்கிறது. இதனைத் தொடர்ந்து, இழப்பீடுகளுக்கான அலுவலகமானது 2021 ஒக்தோபர் 15 இல் சிவில் சமூக அமைப்புகளுடனான கலந்துரையாடலொன்றினை ஏற்பாடு செய்தது, இதில் 30 அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 40 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலின் தொடர்ச்சியாக, பாதிக்கப்பட்ட சமூகங்களின்

நலனுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்துவது குறித்து கலந்துரையாடுவதற்கு பல சிவில் சமூக அமைப்புகளுடனான் இருதரப்புக் கலந்துரையாடல்களையும் நடாத்தியிருந்தது.

- **புதிய இழப்பீட்டு முறை பற்றிய கேள்வி பதில் வெளியீடு**

இன்னலுற்ற நபர்களுடன் நெருக்கமாகப் பழகுபவர்கள் மற்றும் இலங்கையின் இழப்பீட்டு முறை பற்றி தெரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கு தகவல்களை வழங்கும் நோக்கில், இழப்பீடுகளுக்கான அலுவலகம் 2021 மார்ச்சில் கேள்விகள் மற்றும் பதில்கள் அடங்கிய கையேட்டை அச்சிட்டு விநியோகித்தது. அமைச்சரவை இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கான அங்கீகாரத்தை வழங்கியதை தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைக் கண்ணோட்டங்களில் சிலவற்றை உள்ளடக்குவதற்காக கையேட்டைத் திருத்துவது முக்கியமானதாகக் கருதப்பட்டது. அதற்கிணங்க மார்ச்சில் கேள்விகள் மற்றும் பதில்கள் அடங்கிய கையேட்டின் திருத்தப்பட்ட பதிப்பு டிசம்பரில் அச்சிடப்பட்டது.

- **தகவல்களின் வெளிப்படைத்தன்மை மற்றும் பரவச் செய்யும் தன்மை**

பொருத்தமான மற்றும் சரியான தகவலை வழங்குவதற்காக, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் இணையத்தளம் புதுப்பிக்கப்பட்டு, இன்னலுற்ற நபர்கள் தொடர்பான விபரங்கள் தொடர்பாக இரகசியத்தன்மையைப் பேணுவதற்கு உட்பட்டு, மூன்று மொழிகளிலும் அனைத்து தகவல்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

மேலும், இன்னலுக்குள்ளான நபர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாக சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானமெடுக்கும் வகையில் விரிவான தகவல் முகாமைத்துவ முறைமையொன்று உருவாக்கப்பட்டு வருகிறது.

- **இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு உணர்வுக் கூர்மையுடன் பணியாற்றுவது தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல்**

மோதலில் பாதிக்கப்பட்டவர்களைக் கையாள்வதில் பின்பற்றப்பட வேண்டிய பாதிக்கப்பட்டவர் மைய அணுகுமுறை தொடர்பாக அதன் பதவியணியினரிற்கு விழிப்புணர்வு மற்றும் அதிகாரம் அளிப்பது இன்றியமையாததொன்று என இழப்பீடுகளுக்கான அலுவலகம் கருதுகிறது. அதன்படி, மீளாய்வு காலப்பகுதியில் உத்தியோகத்தர்களுக்கு பின்வரும் அமர்வுகள் நடாத்தப்பட்டன-

- சமத்துவம் மற்றும் நீதிக்கான நிலையத்தால் (CEJ) நடாத்தப்பட்ட பாலினம் மற்றும் இழப்பீடுகள் பற்றிய அமர்வு.
- தேவைநாடும் பெண்களால் நடாத்தப்பட்ட உள்நாட்டு வன்முறை பற்றிய விழிப்புணர்வு அமர்வு (WIN)
- 2021 ஆம் ஆண்டு உலக மனநல தினத்தைக் குறிக்கும் அமர்வொன்று பாதிக்கப்பட்டவர்களின் மனநிலை மற்றும் நிவாரணம் வழங்குவதில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உதடததியோகத்தர்களின் வகிபங்கைப் புரிந்துகொள்வதற்காக உள சமூக ஆதரவுக்கான ஆலோசகரினால் நடாத்தப்பட்டது.
- இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பயிற்றுவிக்கப்பட்ட சம்பவ முகாமையாளர்களால் அவர்களின் உண்மையான அனுபவத்தின் அடிப்படையில் நடாத்தப்பட்ட மன அழுத்தம் மற்றும் சமாளித்தல் தொடர்பான அமர்வு
- சேவை வழங்கலில் பொதுவான மற்றும் விளைவு சார்ந்த அணுகுமுறையை கடைப்பிடிப்பதில் முக்கிய கவனம் செலுத்தி பணிப்பாளர் நாயகத்தால் நடாத்தப்பட்ட இழப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்கள் பற்றிய விழிப்புணர்வு அமர்வு.
- புனர்வாழ்வு பணியகத்தின் ஆணையாளர் நாயகம் - 2022.01.24 நடாத்திய இன்னலுக்குள்ளான நபர்களின் தேவைகளைப் புரிந்துகொள்வதற்கான விழிப்புணர்வு அமர்வு.

4. செயலகம்

செயலகத்தின் பதவியணி நிலை பின்வருமாறுள்ளது:

பணிமுறைக் குழுநிலை	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர்	வெற்றிடங்கள்
பணிப்பாளர் நாயகம்	01	-
பணிப்பாளர்	01	01
பிரதி பணிப்பாளர்/ உதவி பணிப்பாளர்	04	01
நிர்வாக உத்தியோகத்தர்	01	-
உள்ளகக் கணக்காய்வாளர்	01	-
இழப்பீட்டுகளுக்கான உத்தியோகத்தர்	22	09
மொழிபெயர்ப்பாளர்	01	-
உள்ளக கணக்காய்வு உதவியாளர்	01	01
முகாமைத்துவ உதவியாளர்	30	09
சாரதி	07	02
அலுவலக உதவியாளர்	07	-
பாதுகாப்பு ஊழியர்	01	-
மொத்தம்	**78**	**23**

மேற்குறிப்பிட்டவற்றிற்கு மேலதிகமாக இழப்பீடுகளுக்கான அலுவலகத்திற்கு இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பினூடாக (IOM) மூன்று (03) முழு நேர ஆலோசகர்களின் சேவைகள் பின்வரும் பணிப் பகுதிகளுக்குக் கிடைக்கப்பெற்றன-

1. ஆலோசகர்/ஆராய்ச்சி மற்றும் நிகழ்ச்சித்திட்டம்
2. உள சமூக நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஆலோசகர்
3. ஆலோசகர்/ நிகழ்ச்சித்திட்டங்கள்

இழப்பீடுகளை வழங்குதல் தொடர்பான பணியை நிறைவேற்றுவதில் குறிப்பிடத்தக்க சவாலாக உள்ள இழப்பீட்டு உரிமைக் கோரல்களை செயன்முறைப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள பதவியணியினரின் பதவியணி நிலைகளிலுள்ள வெற்றிடங்கள் (இழப்பீட்டு உத்தியோகத்தர்களின் 41% வெற்றிடங்களும், முகாமைத்துவ உதவியாளர்களின் 30% வெற்றிடங்களும்) விரைவில் நிவர்த்தி செய்யப்படலாம் என்று நம்பப்படுகிறது.

5. நிதி செயன்முன்னேற்றத்தின் பொழிப்பு

OR ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு ஒதுக்கீடாக ரூபா 910 மில்லியன் தொகையை பெற்றிருந்தது. இருப்பினும், கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் அரசாங்கத்தால் அடிக்கடி விதிக்கப்பட்ட பூட்டுதல்கள் காரணமாக, எதிர்பார்த்த செலவினங்களை எதிர்கொள்ள முடியவில்லை. இதன் விளைவாக, அமைச்சால் கோரப்பட்டவாறு மீண்டெழும் வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ரூபா 400 மில்லியன் தொகையும் மூலதன வரவுசெலவுத் திட்டத்தில் இருந்து ரூபா 3 மில்லியன் தொகையும் சேமிப்புக்களாக இனங்காணப்பட்டிருந்தன.

மீளாய்வாண்டுக்கான நிதி செயன்முன்னேற்றத்தின் பொழிப்பு கீழே உள்ளது

விடயம்	ஒதுக்கீடு (ரூபா. மில்லியன்)	பெறப்பட்ட கட்டுநிதி (ரூபா. மில்லியன்)	செலவினம் (ரூபா. மில்லியன்	பெறப்பட்ட கட்டுநிதியின் % ஆக செலவினம்	குறிப்புக்கள்
மீண்டெழுபவை					
சம்பளங்களும் ஆளணி வேதனங்களும்	42.00	40.50	40.50	100%	உருவாக்கப்பட்ட பெறுவனவுகளில் இருந்து ரூபா 4.12 மில்லியன் செலவினத்தின் மேலதிக தொகை ஈடுசெய்யப்பட்டது.
ஏனைய மீண்டெழுபவை	58.00	29.00	29.00	100%	உருவாக்கப்பட்ட பெறுவனவுகளில் இருந்து ரூபா 14.04 மில்லியன் செலவினத்தின் மேலதிக தொகை ஈடுசெய்யப்பட்டது.
இழப்பீட்டுக் கொடுப்பனவு	800.00	399.83	399.83	100%	
உப மொத்தம்	**900.00**	**469.83**	**469.33**	**100%**	
மூலதனம்					
மூலதனம்	10.00	7.00	2.41	0.17%	பெறுகைகளிற்கான பதிலைப் பெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் குறைந்த பயன்பாடு காணப்பட்டது.
கூட்டுமொத்தம்	**910.00**	**476.83**	**471.44**	**99%**	

6. நன்றி நவில்தல்

இழப்பீடுகளுக்கான அலுவலகம் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய அதன் முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களில் பலவற்றை செயற்படுத்துவதற்கு இடம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு (IOM) வழங்கிய உதவிக்கு மிகுந்த பாராட்டுதல்களை பதிவு செய்ய விரும்புகிறது. IOM இன் உதவியானது அதன் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளது.

நஸீமா அஹமட்
பணிப்பாளர் நாயகம்
இழப்பீடுகளுக்கான அலுவலகம்
இலங்கை

இழப்பீடுகளுக்கான அலுவலகம்
இல. 408, காலி வீதி,
கொழும்பு – 03.

இழப்பீடுகளுக்கான அலுவலகம்

2021.12.31ம் திகதிக்கான பொது நிறுவனத்துறை நிதி நிலவரம் தொடர்பான விபரம்

சொத்துக்கள்	குறிப்பு	2021 ரூபா	2020 ரூபா
நடைமுறைச் சொத்துக்கள்			
இருப்பு	1	845,419	672,691
பெறக்கூடிய கடன்	2	4,375,312	4,375,312
அனர்த்த கடன் - குறுகிய காலம்	3	2,059,244	1,934,233
ஊழியர்களின் சேமலாப முதலீடு	4	20,136,386	22,872,689
முற்பணம், முற்கொடுப்பனவு மற்றும் கிடைக்கப்பெறவேண்டியவை	5	31,359,954	28,274,415
காசு மற்றும் காசுக்கு சமனானவை	6	22,408,301	31,087,652
		81,184,617	89,216,992
நடைமுறையில்லாத சொத்துக்கள்			
அனர்த்த கடன்	7	9,397,771	9,905,891
சொத்து, ஆலை மற்றும் உபகரணங்கள்	8	6,264,289	5,516,412
நீண்ட கால முதலீடுகள்	9	504,910,713	745,410,713
தொட்டுணர முடியாத சொத்துக்கள்	10	2,245,500	2,664,000
		522,818,273	763,497,016
மொத்த சொத்துக்கள்		604,002,890	852,714,008
பொறுப்புக்கள்			
நடைமுறை பொறுப்புக்கள்			
ஏனைய கொடுப்பனவுகள்	11	12,538,827	6,145,248
		12,538,827	6,145,248
நடைமுறையில்லாத பொறுப்புக்கள்			
முன்னைய மற்றும் ஏனைய பொறுப்புக்கள்	12	363,419,692	603,919,692
ஓய்வுக் கால நன்மைகள்	13	14,060,457	16,199,662
		377,480,149	620,119,354
மொத்த பொறுப்புக்கள்		390,018,977	626,264,602
தேறிய சொத்து		213,983,914	226,449,406
தேறிய சொத்துப் பங்கு			
அரச மானியம், மீள் மதிப்பீட்டு மிகை		7,723,578	2,650,032
திரட்டப்பட்ட மிகை		206,260,336	223,799,374
மொத்த தேறிய சொத்து / பங்கு		213,983,914	226,449,406

உறுதிப்படுத்தல்

2021 டிசம்பர் 31ம் திகதிய நிதிக்கூற்று உண்மை மற்றும் சாதாரண நோக்கில் பெறப்பட்டவை எனவும், 2021 டிசம்பர் 31ம் திகதி வரை நிறுவனத்தின் மிகை/பற்றாக்குறை தொடர்பான நிதிக்கூற்று உண்மை எனவும் நியாயமானது எனவும் உறுதிப்படுத்துகின்றேன்

.....
எஸ்.என்.சீ.டபிள்யு.எம்.தர்மகீர்த்தி
பிரதிப் பணிப்பாளர் (நிதி)

.....
எ.எல்.எஸ்.நஸீமா
பணிப்பாளர் நாயகம்

இந் நிதிக்கூற்றினை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் என்பன இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் சபையால் ஏற்கப்பட்டது மேலும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் கையொப்பமிட்டு இந்நிதிக் கூற்று வழங்கப்பட்டுள்ளது

.....
தாரா விஜயதிலக்க
தலைவி

.....
கலாநிதி.ஜே.எம். சுவாமிநாதன்
உறுப்பினர்

இழப்பீடுகளுக்கான அலுவலகம்

2021.12.31 ல் முடிவடைந்த வருடத்தின்

நிதிச் செயற்பாட்டு நிலவரம் தொடர்பான விபரம்

	குறிப்பு	2021	2020
		ரூபா.	ரூபா.
வருமானம்			
மீள்நடைமுறை மானியம்	I	459,332,000	397,063,000
வட்டி	II	9,117,252	14,504,036
ஏனைய வருமானம்		1,400	432
ஒத்திவைக்கப்பட்ட வருமானம்		1,926,454.00	2,398,642
மொத்த வருமானம்		**470,377,106**	**413,966,110**
செலவுகள்			
ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன்	III	44,621,412	51,547,976
கொள்கை மற்றும் நோக்கங்களை செயற்படுத்தல்	IV	399,832,058	296,751,076
இழப்பீட்டுக்கான ஏனைய செலவுகள்	V	789,678	-
விநியோகம் மற்றும் கொடுப்பனவுகள்	VI	2,595,965	1,747,049
தேய்மானம்	VII	1,926,454	2,398,642
கடன் தீர நிதி சேர்த்தல்	VIII	418,500	351,000
நிலையான சொத்துக்களை பராமரித்தல்	IX	4,197,975	3,002,605
ஏனைய செலவினங்கள்	X	33,109,574	41,573,814
மொத்த செலவினங்கள்		**487,491,617**	**397,372,162**
மிகை/உரிய காலத்தின் பற்றாக்குறை		**(17,114,511)**	**16,593,948**

இழப்பீடுகளுக்கான அலுவலகம்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் அறிக்கை

விபரம்	குறிப்பு	2021	2020
		(ரூபா.)	(ரூபா.)
இயங்கிவரும் நடவடிக்கையின் நிதிப் பாய்ச்சல்			
திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற கட்டுநிதி		459,332,000	397,063,000
நானாவித செலவினம் மற்றும் வருமானம்		1,400	432
நீக்கப்பட்ட சொத்துக்களின் வருமானம்		-	4,340
ஏனைய மீண்டுவரும் செலவினம்	அ	(483,791,133)	(400,341,449)
இயங்கிவரும் நடவடிக்கையின் தேறிய நிதிப் பாய்ச்சல்		**(24,457,732)**	**(3,273,678)**
முதலீட்டு நடவடிக்கையின் நிதிப் பாய்ச்சல்			
வட்டி	ஆ	1,795,662	20,563,000
கடன் மீளப் பெறல் மற்றும் ஏனையவை	இ	14,298,359	9,707,238
நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல்	ஈ	(2,413,108)	(2,398,300)
முதிர்ச்சியடைந்த சொத்துக்களை மீளப் பெறல்	உ	240,500,000	128,000,000
முதலீடுகள் மற்றும் ஏனையவை	ஊ	(245,402,530)	(177,587,831)
இயங்கிவரும் நடவடிக்கையின் தேறிய நிதிப் பாய்ச்சல்		**8,778,382**	**(21,715,984)**
நிதி நடவடிக்கையின் நிதிச் சுற்றோட்டம்		**7,000,000**	**2,410,000**
திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மானியம்		**7,000,000**	2,410,000
நிதி மற்றும் நிதிக்கு நிகரானவை		**(8,679,350)**	**(22,579,572)**
வருட ஆரம்பத்தின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று	எ	**31,087,651**	**53,667,223.00**
வருட இறுதியின் நிதி மற்றும் நிதிக்கு சமமானதொன்று	ஏ	**22,408,301**	**31,087,651.00**

* *கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புக்கள் இந்நிதி அறிக்கையின் முக்கிய ஒரு அம்சமாகும்.*

2021 டிசம்பர் 31 ம் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதி தொடர்பான அறிக்கை

2020 (ரூபா.)	குறிப்பு		2021 (ரூபா.)
		சொத்துக்கள்	
672,691.31	**1**	**கையிருப்பு**	**845,419.40**
621,031.31		கையிருப்பு (காகிதாகிகள்) அட்டவணை - iii	837,119.40
51,660.00		கையிருப்பு (நலன்புரி) அட்டவணை - iii	8,300.00
4,375,312.36	**2**	**கடன் மீளப் பெறல்**	**4,375,312.36**
4,375,312.36		இலங்கை வங்கி வர்த்தக கடன் ரூபா.200,000	4,375,312.36
4,375,312.36			
		குறைத்தல் - ஒதுக்கம்	
(4,375,312.36)		அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கம் இலங்கை வங்கி வர்த்தக கடன் ரூபா.200,000	(4,375,312.36)
-		2021 டிசம்பர் 31ம் திகதியின் மீதி	-
1,934,233.40	**3**	**அலுவலர் சபைக் கடன்**	**2,059,243.72**
288,585.16		சொத்துக் கடன் அட்டவணை - ii	214,922.40
1,627,248.24		அனர்த்த கடன் அட்டவணை - ii	1,814,321.32
18,400.00		விசேட முற்பணம் அட்டவணை - ii	-
-		பண்டிகைக்கால முற்பணம் அட்டவணை - ii	30,000.00
22,872,688.94	**4**	**ஊழியர் சேமலாப முதலீடு**	**20,136,385.97**
22,872,688.94		ஊழியர் சேமலாப முதலீடு	20,136,385.97
28,274,415.33	**5**	**முற்பணம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய பெறுவனவுகள்**	**31,359,954.37**
350,000.00		கடன் பெறும் நிறுவனங்களினால் கிடைக்கப் பெற்ற வட்டி	6,329,039.31
750,242.51		சேமலாப முதலீட்டின் வட்டி	519,644.63
647,007.33		கிடைக்க வேண்டிய வருமதிகள் அட்டவணை - vii	665,258.97

207,920.85		முன்னைய கொடுப்பனவுகள் அட்டவணை - iv	104,194.21
3,545,007.26		தொகுக்கப்பட்ட வருமதிகள் அட்டவணை - ix	1,358,694.87
22,774,237.38		மீளப் பெற முடியுமான வைப்புகள் அட்டவணை - v	22,383,122.38
31,087,651.43	**6**	**காசு மற்றும் காசுக்கு நிகரானவை**	**22,408,301.48**
		அட்டவணை - vi	
		இலங்கை வங்கி - தப்ரபேன் கிளை	
(217,029,004.79)		கணக்கு இல - 2026495	22,093,017.44
		இலங்கை வங்கி - தப்ரபேன் கிளை	
315,284.04		கணக்கு இல - 2026496	315,284.04
		இலங்கை வங்கி - மெட்ரோபொலிடன் கிளை	
247,801,372.18		கணக்கு இல. 74757297	-
9,905,889.87	**7**	**அலுவலர் சபைக் கடன்**	**9,397,770.90**
2,581,252.58		சொத்துக் கடன் அட்டவணை - ii	2,270,238.15
7,311,837.29		அனர்த்த கடன் அட்டவணை - ii	7,114,732.75
2,800.00		விசேட முற்பணம் அட்டவணை - ii	2,800.00
10,000.00		பண்டிகைக்கால முற்பணம் அட்டவணை - ii	10,000.00
5,516,412.40	**8**	**சொத்துக்கள், இயந்திரம் மற்றும் உபகரணம்**	**6,264,289.31**
		கிரயம்	
43,894,055.98		வருட ஆரம்ப மீதி	45,617,355.98
1,723,300.00		வருடத்தினுள் சேர்க்கப்பட்டவை ஜெர்னல் குறிப்பு இல.22	2,413,108.46
		5% பகிர்வு தக்கவைக்கப்பட்டது	261,222.84
45,617,355.98			**48,291,687.28**
		தேய்மானம்	
37,702,301.21		வருட ஆரம்ப திகதி பெறுமதி	40,100,943.58
2,398,642.37		கூட்டு- வருடத்திற்கான பெறுமதி	1,926,454.39
40,100,943.58		வருட இறுதித் திகதி பெறுமதி	**42,027,397.97**
5,516,412.40		வருட இறுதித் திகதி பெறுமதி	**6,264,289.31**

(விபரத்திற்காக குறிப்பு 12 -1 பார்க்கவும்)

745,410,712.63	**9**	**நீண்ட கால முதலீடுகள்**	**504,910,712.63**
745,410,712.63		ஒன்றிணைக்கப்பட்ட நிவாரண திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் ஒருங்கிணைந்த உதவித் திட்டம்	504,910,712.63
		(விபரத்திற்காக குறிப்பு 13-1 பார்க்கவும்)	
2,664,000.00	**10**	**புலப்படாத சொத்து**	**2,245,500.00**
		கிரயம்	
2,340,000.00		வருட ஆரம்ப திகதி பெறுமதி	2,664,000.00
675,000.00		வருடத்தினுள் சேர்க்கப்பட்டவை	-
		கடன் தீர நிதி சேர்த்தல்	
		வருட ஆரம்ப திகதி பெறுமதி	-
351,000.00		கூட்டு- வருடத்திற்கான பெறுமதி	418,500.00
351,000.00		வருட இறுதித் திகதி பெறுமதி	**418,500.00**
		முன் எடுக்கப்பட்ட பெறுமதி	
		வருட இறுதித் திகதி பெறுமதி	
2,664,000.00		*(விபரத்திற்காக குறிப்பு 12 -1 பார்க்கவும்)*	2,245,500.00
852,714,007.67		**மொத்த சொத்து**	**604,002,890.14**
6,145,247.73	**11**	**ஏனைய கொடுப்பனவுகள்**	**12,538,827.21**
3,684,489.73		தொகுக்கப்பட்ட செலவினம் - அட்டவணை- **viii**	4,513,577.41
1,860,758.00		உரிமை கோரப்படாத நட்டஈட்டு கணக்கு அட்டவணை -**x**	6,564,026.96
-		வைப்புக் கணக்கு	261,222.84
600,000.00		கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடு செய்தல்	1,200,000.00
603,919,692.36	**12**	**ஒதுக்கல் மற்றும் ஏனைய பொறுப்புக்கள்**	**363,419,692.36**
		கடன் வழங்குவதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்ட முதலீடு	
599,544,380.00		ஒருங்கிணைந்த உதவித் திட்டம்	359,044,380.00
4,375,312.36		அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கம் வணிக கடன் ரூபா.200,000	4,375,312.36
16,199,662.00	**13**	**ஓய்வூதிய வரப்பிரசாத பொறுப்புக்கள்**	**14,060,457.00**
16,199,662.00		ஓய்வூதிய வரப்பிரசாத பொறுப்புக்கள் அட்டவணை - xi	14,060,457.00
626,264,602.09		**மொத்த பொறுப்புக்கள்**	**390,018,976.57**
226,449,405.58		**தேறிய சொத்துக்கள்**	**213,983,913.57**

2021.12.31 ஆண்டிறுதிக்கான சாராம்ச நிதி முன்னேற்ற அறிக்கை தொடர்பான விபரம்

2020 (Rs.)	குறிப்பு		2021 (Rs.)
		வருமதிகள்	
397,063,000.00	**I**	**அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற வருமதிகள்**	**459,332,000.00**
285,063,000.00		திறைசேரியின் கட்டுநிதி - நட்டஈடு	399,832,000.00
62,000,000.00		திறைசேரியின் கட்டுநிதி - சம்பளம்	30,500,000.00
50,000,000.00		திறைசேரியின் கட்டுநிதி - ஏனைய மீண்டெழும் செலவினம்	29,000,000.00
14,504,036.35	**II**	**வட்டி**	**9,117,251.61**
		நிதி நிறுவனங்களின் முதலீடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டி	
687,909.83		இலங்கை வங்கி	400,000.00
150,000.00		மக்கள் வங்கி	150,000.00
200,000.00		புதிய அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் முதலீடு	200,000.00
5,887,347.67		இலங்கை வங்கி புதிய சுயதொழில் கடன் திட்டம்	4,501,348.49
1,500,593.06		இலங்கை வங்கி புதிய வீட்டுக் கடன் திட்டம்	1,077,690.82
2,222,993.92		சேமலாப முதலீடு - வீட்டு வசதி மேம்பாட்டு நிதி நிறுவன வங்கி	1,395,916.81
3,446,730.39		சேமிப்பு கணக்கு - இலங்கை வங்கி	928,960.07
		அலுவலர் சபை கடனுக்கான வட்டி	
114,871.16		சொத்துக் கடன்	102,666.01
290,184.56		அனர்த்த கடன்	356,456.25
3,405.76		விசேட முற்பணம்	4,213.16
431.67		**ஏனைய வருமானம்**	**1,400.26**
431.67		ஏனைய வருமானம்	1,400.26
411,567,468.02		**மொத்த வருமானம்**	**468,450,651.87**

செலவினங்கள்

51,547,975.95	**III**	**ஊதியம், சம்பளம் மற்றும் ஊழியர் நலன்**	**44,621,412.13**
24,320,713.44		உறுப்பினர் சபை சம்பளம்	23,847,391.95
3,624,038.48		ஊழியர் நன்கொடை நிதியம்	3,495,412.49
906,010.06		ஊழியர் நம்பிக்கை நிதியம்	873,853.14
4,987,623.33		வாழ்வாதார கொடுப்பனவு	4,933,196.66
196,243.53		மொழிக் கொடுப்பனவு	207,731.17
959,058.34		ஏனைய கொடுப்பனவு	948,691.68
-		இடைக்கால கொடுப்பனவு	12,500.00
-		விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஓய்வூதிய பங்களிப்புக்கள்	119,631.25
19,500.00		ஊக்கக் கொடுப்பனவு	18,000.00
368,500.00		தொழில்சார் கொடுப்பனவு	283,000.00
442,083.79		மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விடுமுறைக்கால கொடுப்பனவு	1,405,676.46
1,620,000.00		தலைவருக்கான கொடுப்பனவு	1,620,000.00
3,240,000.00		உறுப்பினர் சபை கொடுப்பனவு	3,870,000.00
66,000.00		கணக்காய்வு குழு அங்கத்தவருக்கான கொடுப்பனவு	102,000.00
638,333.33		வாகனத்திற்கான வாடகை கொடுப்பனவு	923,333.33
593,506.65		எரிபொருள் கொடுப்பனவு	799,614.00
1,200,000.00		பயண கொடுப்பனவு	925,000.00
408,000.00		தொலைபேசி கொடுப்பனவு	489,000.00
4,989,059.50		தன்னார்வ ஓய்வுத் திட்ட கொடுப்பனவு	-
2,969,305.50		சேமலாப நிதி கொடுப்பனவு	(252,620.00)
296,381,049.00	**IV**	**கொள்கை மற்றும் நோக்கங்களை செயற்படுத்தல்**	**399,832,058.00**
		இறப்பு/காயத்திற்கான நட்டஈட்டுக் கொடுப்பனவு	
230,000.00		அரச ஊழியர்	425,000.00
46,057,500.00		சாதாரண பொது மக்கள்	40,705,000.00
7,275,000.00		உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் 21 சித்திரை 2019	300,000.00
214,310.00		அரசியல் பழிவாங்கல் இறப்பு மற்றும் காயம்	-
		பாதிப்படைந்த சொத்துக்கான நட்டஈடு வழங்கல்	
11,980,950.00		அரச ஊழியர்	18,821,500.00
92,850,824.00		சாதாரண பொது மக்கள்	302,385,296.00
27,119,520.00		வணக்கஸ்தலம்	30,124,137.00

		கொள்கை மற்றும் நோக்கங்களை செயற்படுத்தல்	
		பாதிப்படைந்த சொத்துக்கான நட்டஈடு வழங்கல்	
28,336,000.00		கண்டிச் சம்பவம் 2018-16/2018	1,802,150.00
77,012,627.00		உயிர்த்த ஞாயிறு தாக்குதல் பின்னர் நடந்த சம்பவம் 2019	268,975.00
4,894,818.00		உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் 21 ஏப்ரல் 2019 (கொச்சிக்கடை)	-
409,500.00		அரசியல் பழிவாங்கல் - சொத்து	-
-		உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் 21 ஏப்ரல் 2019 (தெஹிவளை)	5,000,000.00
370,026.50	**V**	***நட்டஈட்டிற்கான ஏனைய செலவுகள்***	**789,678.47**
296,236.50		சுயதொழில் பயிற்சி திட்டம்	149,321.00
73,790.00		நட்டஈட்டு செயற்பாட்டுத் திட்டங்களும், நடமாடும் சேவைகளும்	640,357.47
1,747,048.81	**VI**	**விநியோகம் மற்றும் நுகர்வோர் பாவனை**	**2,595,964.91**
957,718.81		காகிதாகிகள் மற்றும் அலுவலகத் தேவைகள்	1,407,282.91
648,000.00		எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய்	1,049,092.00
57,000.00		சீருடைகள்	57,000.00
84,330.00		பத்திரிகை மற்றும் சஞ்சிகைகள்	82,590.00
2,398,642.37	**VII**	**தேய்மானம்**	**1,926,454.39**
699,854.68		தேய்மானம் - தளபாடங்கள், அலுவலக உபகரணம் மற்றும் சாதனங்கள்	700,546.38
598,082.19		அறைகளாக பிரித்தலுக்கான தேய்மானம்	876,917.81
46,888.39		தொலைபேசிக்கான தேய்மானம்	61,310.20
84,477.13		இயந்திரங்களுக்கான தேய்மானம்	107,929.08
969,339.98		கணனிகளுக்கான தேய்மானம்	179,750.92
351,000.00	**VIII**	**கடன் தீர நிதி சேர்த்தல்**	**418,500.00**
351,000.00		கணனி தரவுத்தளம்	418,500.00

3,002,604.90	**IX**	**நிலையான சொத்துக்களை பராமரித்தல்**	**4,197,975.49**
480,502.25		நிலையான சொத்துக்களை புதுப்பித்தலும் பராமரித்தலும்	406,992.50
1,049,519.47		வாகனங்களை புதுப்பித்தலும் பராமரித்தலும்	1,604,804.77
1,472,583.18		கட்டிட பராமரிப்புச் செலவினம்	2,186,178.22
41,573,814.32	**X**	**ஏனைய செலவினங்கள்**	**33,109,573.58**
19,600.00		பிரயாண செலவினம் - உள்ளூர்	122,067.50
462,603.98		தொலைபேசி கட்டணம்	472,690.08
150,000.00		தபால் கட்டணம்	273,090.00
2,524,748.46		மின்சாரம் மற்றும் ஏனைய செலவினம்	2,228,298.10
32,667,550.03		கட்டிடத்தின் வாடகை	22,408,466.96
434,877.00		கணக்காய்வு கட்டணம்	600,000.00
214,000.00		கருத்தரங்குகள், செயலமர்வுகள் மற்றும் ஆட்சேர்த்தல்	166,114.16
156,077.00		நானாவிதச் செலவினம்	379,039.00
796,207.96		நலன்புரிச் செலவினம்	1,307,002.50
2,592,000.00		வாகன குத்தகை வாடகை	2,592,000.00
-		அச்சிடல் மற்றும் விளம்பரக் கட்டணம்	924,059.00
15,000.00		நீதிச் சேவை கட்டணம் - எம்.சீ.இல.5961	15,000.00
1,541,149.89		ஊழியர்களுக்கான வைத்தியக் காப்புறுதி	1,621,746.28
397,372,161.85		**மொத்த செலவினம்**	**487,491,616.97**
14,195,306.17		**உரிய காலத்தின் மிகை/பற்றாக்குறை**	**(19,040,965.10)**

பணம் / நிதி பாய்ச்சல் அறிக்கைக்கான நிதி குறிப்பு

	2021 (ரூபா.)
அ ஏனைய மீண்டுவரும் செலவினம்	**(483,791,132.51)**
தனிப்பட்ட ஊதியம்	(46,777,697.98)
பிரயாணம்	(77,850.00)
வினியோகம்	(2,812,323.00)
பராமரிப்பு	(3,576,276.02)
ஒப்பந்த அடிப்படையிலான சேவைகள்	(26,482,237.46)
ஏனைய மீண்டுவரும் செலவினம்	(3,426,163.58)
இறப்பு / காயத்திற்கான நட்டஈடு	(41,430,000.00)
பாதிப்படைந்த சொத்துக்களுக்கான நட்டஈடு	(358,402,058.00)
நட்டஈட்டிற்கான ஏனைய செலவுகள்	(806,526.47)
ஆ வட்டி	**1,795,661.85**
2020ம் ஆண்டிற்கான கடன் வழங்கும் வங்கிச் சேவைக் கட்டணங்கள்	350,000.00
பணிக்கொடை முதலீடு	53,366.36
கடன் திட்டங்களிலிருந்து கிடைத்த வட்டி	
உறுப்பினர் சபையின் கடனுக்கான வட்டி	356,456.25
சொத்துக்கள் கடனுக்கான வட்டி	102,666.01
விசேட கொடுப்பனவுகளுக்கான வட்டி	4,213.16
சேமிப்பு கணக்கிற்கான வட்டி	928,960.07
இ கடன் மீளப் பெறல் மற்றும் ஏனையவை	**14,298,358.67**
பண்டிகைக் கால முற்பணம்	290,000.00
உறுப்பினர் சபைக் கடன்	1,994,533.46
சொத்துக் கடன்	384,677.19
விசேட முற்பணம்	126,400.00
உரிமை கோரப்படாத இழப்பீட்டு கணக்கு	5,911,673.96
வைப்பு கணக்கு	1,281,622.76
பணிக்கொடை முதலீடு	4,309,451.30
ஈ நிலையான சொத்துக்களை கையகப்படுத்தல்	**(2,413,108.46)**

தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள் மற்றும் சாதனங்கள்	(944,310.50)
இயந்திரங்களும் அதன் பிரிவுகளும்	(518,364.00)
அலுவலக கட்டிடத்தினை அறைகளாக பிரித்தல்	(950,433.96)
உ முதிர்ச்சியடைந்த சொத்துக்களை மீளப் பெறல்	**240,500,000.00**
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை	**12,000,000.00**
2021 பெப்ரவரி 09	1,000,000.00
2021 மார்ச் 29	1,000,000.00
2021 ஜூன் 23	1,000,000.00
2021 ஜூலை 27	2,000,000.00
2021 ஜூலை 29	1,000,000.00
2021 ஆகஸ்ட் 08	1,000,000.00
2021 ஒக்டோபர் 04	1,000,000.00
2021 நவம்பர் 11	2,000,000.00
2021 டிசம்பர் 16	1,000,000.00
2021 டிசம்பர் 22	1,000,000.00
இலங்கை வங்கி	**228,500,000.00**
2021 மார்ச் 16 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1%	32,500,000.00
2021 ஆகஸ்ட் 13 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1%	2,000,000.00
2021 ஆகஸ்ட் 13 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1%	5,000,000.00
2021 ஆகஸ்ட் 13 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1%	50,000,000.00
2021 ஆகஸ்ட் 13 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1%	50,000,000.00
2021 ஆகஸ்ட் 13 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1%	50,000,000.00
2021 டிசம்பர் 28 - இலங்கை வங்கி - புதிய வீடமைப்பு கடன் 1%	9,000,000.00
2021 டிசம்பர் 28 - இலங்கை வங்கி - சுயதொழில் கடன் 1%	30,000,000.00
ஊ முதலீடு மற்றும் ஏனையவை	**(245,402,529.76)**
முதிர்ச்சியடைந்த முதலீடுகளை திறைசேரிக்கு பரிமாற்றல்	**(240,500,000.00)**
2021 மார்ச் 19 - இலங்கை வங்கி	(32,500,000.00)
2021 ஆகஸ்ட் 30 - இலங்கை வங்கி	(157,000,000.00)
2021 ஆகஸ்ட் 30 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார	(7,000,000.00)
2021 நவம்பர் 22 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார	(3,000,000.00)

2021 டிசம்பர் 23 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச	(1,000,000.00)
2021 டிசம்பர் 24 - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச	(1,000,000.00)
2021 டிசம்பர் 30 - இலங்கை வங்கி	(39,000,000.00)
ஊ முதலீடு மற்றும் ஏனையவை	**(4,902,529.76)**
பண்டிகைக் கால முற்பணம்	(320,000.00)
அனர்த்த கடன்	(1,984,502.00)
விசேட முற்பணம்	(108,000.00)
உரிமை கோரப்படாத கணக்கு	(1,208,405.00)
நானாவித வைப்பு	(1,281,622.76)
எ வருட ஆரம்ப நிதி மற்றும் நிதிப் பாய்ச்சல்	**31,087,651.43**
இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல. 02026495	(217,029,004.79)
இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல. 02026496	315,284.04
இலங்கை வங்கி - சேமிப்புக் கணக்கு இல. 74757297	247,801,372.18
ஏ வருட இறுதி நிதி மற்றும் நிதிப் பாய்ச்சல்	**22,408,301.48**
இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல. 02026495	22,093,017.44
இலங்கை வங்கி - நடைமுறைக் கணக்கு இல. 02026496	315,284.04

இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஒதுக்கம் மற்றும் பங்கு தொடர்பான கூற்று

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்தின் தேறிய சொத்து / பங்கு

	திரட்டப்பட்ட நிதி	அரசின் மூலதன மானியம் மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்	மொத்தம்
2021.01.01 இன் மீதி	**223,799,374**	**2,650,032**	**226,449,406**
வருடத்திற்குரிய சீரமைப்பு	(391,115)	(1,926,454.00)	(1,535,339)
வருடத்திற்குரிய ஒதுக்கம் (தேறிய)		7,000,000	7,000,000
வருடத்திற்குரிய செலவினம்	(33,412)		(33,412)
காலப் பகுதிக்கான தேறிய மிகை/வருட பற்றாக்குறை	(17,114,511)		(17,114,511)
2021.12.31 இன் மீதி	**206,260,336**	**7,723,578**	***213,983,914***

2021

நடைமுறையில்லாத சொத்துக்கள்

குறிப்பு இல. 12-1 நிதி நிலைக்கு

	மோட்டார் வாகனம்	தளபாடம் அலுவலக உபகரணங்கள் மற்றும் பொருத்திகள்	இயந்திரங்கள் மற்றும் பிரிவுகள்	தொலைபேசி	அலுவலக கட்டிடத்தினை அறைகளாகப் பிரித்தல்	கணனிகள்	கணனி தரவுத்தள நிகழ்ச்சித் திட்டம்	மொத்தம்
கிரயம்								
2021.01.01 திகதியில் மீதி	23,144,250.00	7,913,324.62	1,363,102.45	1,495,989.76	1,475,000.00	10,225,689.15	2,664,000.00	45,617,355.98
வருடத்தினுள் சேர்க்கப்பட்டவை	-	*944,310.50*	*518,364.00*	-	*950,433.96*	-	-	*2,413,108.46*
ஜெனல் குறிப்பு இல.22					*261,222.84*			*261,222.84*
2021.12.31 திகதியில் மீதி	*23,144,250.00*	*8,857,635.12*	*1,881,466.45*	*1,495,989.76*	*2,686,656.80*	*10,225,689.15*	*2,664,000.00*	*48,291,687.28*
தேய்மானம்								
2021.01.01 திகதியில் மீதி	23,144,250.00	4,396,683.38	1,283,780.25	874,749.49	598,082.19	9,803,398.27	-	40,100,943.58
ஆண்டுக்கான கட்டணங்கள்	-	*700,546.38*	*107,929.08*	*61,310.20*	*876,917.81*	*179,750.92*	*418,500.00*	*1,926,454.39*
2021.12.31 திகதியில் மீதி	*23,144,250.00*	*5,097,229.76*	*1,391,709.33*	*936,059.69*	*1,475,000.00*	*9,983,149.19*	*418,500.00*	*42,027,397.97*
2021.12.31 திகதியில் தேறிய பெறுமதி	-	*3,760,405.36*	*489,757.12*	*559,930.07*	*1,211,656.80*	*242,539.96*	*2,245,500.00*	*6,264,289.31*

2021.12.31 திகதியில் முடிவடைந்த ஒன்றிணைந்த நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட முதலீடு

குறிப்பு இல.13-1 நிதி நிலைக்கு

நிறுவனம்	பேரேட்டுப் பக்கம்	வீட்டுக் கடன்	கைத்தொழில் கடன்	சுயதொழில் கடன்	புதிய வீடமைப்புக் கடன்	மொத்தம்
இலங்கை வங்கி	37,39 & 41	-	16,000,000.00	320,204,712.63	98,991,000.00	435,195,712.63
அரச முதலீட்டு வங்கி	43	10,000,000.00	-	-	-	10,000,000.00
தேசிய வீடமைப்பு அதிகாரசபை	45	49,715,000.00	-	-	-	49,715,000.00
மக்கள் வங்கி	47	10,000,000.00	-	-	-	10,000,000.00
மொத்தம்		**69,715,000.00**	**16,000,000.00**	**320,204,712.63**	**98,991,000.00**	***504,910,712.63***

குறிப்பு இல.13-2 நிதி நிலைக்கு

2021.12.31இல் நிதி நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறும் சேவைக் கட்டணங்கள்

நிறுவனம்	பேரேட்டுப் பக்கம்	மொத்தம் ரூபா.
இலங்கை வங்கி	21	400,000.00
மக்கள் வங்கி	23	150,000.00
அரச முதலீட்டு வங்கி	25	200,000.00
இலங்கை வங்கி புதிய வீடமைப்புக் கடன்	29	1,077,690.82
இலங்கை வங்கி புதிய சுயதொழில் கடன்	31	4,501,348.49
மொத்தம்		***6,329,039.31***